# வழியில் கருணை காட்டுதல்

பாடம் 16

என்னுடைய ஊர் எரிகோ. நான் திமெயுவின் மகனாகிய பாத்திமேயு. எல்லாரும் என்னை குருடன் பார்த்திமேயு என அழைத்தார்கள். நான் பார்வையற்றவனாக இருந்தபடியால் அக் காலத்தில் பாதை வழியிலிருந்து பிச்சை எடுத்துக் கொண்டு இருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

ஒரு நாள் நான் பாதை ஓரமாக அமர்ந்து பிச்சை எடுத்துக் கொண்டு இருக்கும் போது ஒரே கலவரமாக இருந்தது. நாசரேத்து இயேசுவே அவ்வழியால் போகின்றார் என கேள்விப்பட்டேன். அவர் எவ்வித நோய்களையும் குணமாக்க வல்லவர் என்று நான் ஏற்கனவே அறிந்திருந்தேன். என்றாலும் பார்வையற்ற நான் எவ்வாறு அவரிடம் செல்வது? என கலங்கினேன். ஆவரிடம் கதைப்பதற்கு நல்ல சந்தர்ப்பம் என நினைத்தேன். அந்நேரம் முதல் உரத்த சத்தமாகக் கத்தத் தொடங்கினேன். ‘‘இயேசுவே, தாவீதின் மகனே, எனக்கு இரங்கும் என்று திரும்ப திரும்ப சத்தமிட்டேன். பேசாதிருக்குமாறு பலர் என்னை அதட்டினர். ‘‘தாவீதின் மகனே, எனக்கு இரங்கும்’’ என்று இன்னும் உரக்கக் கத்தினேன்.

இயேசுவுக்கு நான் கத்திய சத்தம் கேட்டிருக்கும். இயேசு என்னை அழைத்து, ‘‘உமக்கு நான் என்ன செய்ய வேண்டும் என விரும்புகிறீர்’’ என்று கேட்டார்.



“நான் பார்வை பெறவேண்டும்” என பதில் கூறினேன். அவர் எனக்கு நிச்சயமாகக் கருணை காட்டுவார் என நம்பினேன். இயேசு என்னை நோக்கி “நீர் போகலாம்: உமது நம்பிக்கை உம்மை நலமாக்கிற்று” என்றார். உடனே நான் மீண்டும் பார்வை பெற்றேன். நான் மகிழ்ச்சியுடன் அவரைப் பின்தொடர்ந்து சென்றேன்.

செயற்பாடு

1. வேதாகமத்தில் மாற்கு 10: 46-52, மாற்கு 7: 31-37 பகுதிகளை வாசிக்கவும்.

2. நாம் செல்லும் வழிகளில் கருணை காட்டக்கூடிய சந்தர்ப்பங்களை அட்டவணைப்படுத்துக.